ஸ்ரீ

லோகோபகாரி.

இந்து ஸ்திரீ புருஷர்கள் ஞாநாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் - க௦.] துர்முகிஸூ புரட்டாசிமீ. [எண் - ௬.

வேதாகமப்பிரகரணம்.

காயத்திரீ
என்னும்
* மந்திரபுஷ்பஸாரம்.

இம்மந்திரங்கள் யஜுர்வேதத்தைச்சார்ந்த
நாராயணமென்னும் பஞ்சமபிரசினத்தில்
பதினொன்றும் அநுவாகம்.

సహస్రశీర్షం దేవం విశ్వాక్షం విశ్వశంభువం ।
విశ్వంనారాయణన్దేవ మక్షరంపరమంప్రభుం ॥

அநேகவாயிரஞ் சிரசுக்களால் பிரகாசிக்கச் செய்கின்றவனையும், உலகிலுள்ள எல்லாப்பொருள்களையும் பார்க்கின்றவனையும், சகத்திலுள்ளவர்களுக்குச் சுகத்தைக் கொடுப்பவனையும், சர்வவியாபகனையும், சீவர்களுக்கு ஆதாரமான நாராயணனாய் விளங்குகின்ற தேவனையும், நாசரகிதனையும், மேலானவனையும், பிரபுவாயும் (இருக்கின்ற பரமாத்துமாவைத தியானிக்கின்றவனாகின்றேன்.)

[பிரபும் - என்பதற்குப்பதில் பதம் என்று பாடமாயிருக்கின்றது. இதனால் மேலான பரமபதத்தில் வீற்றிருக்கின்ற நாராயணனைத் தியானிக்கின்றேன் என்றும் பொருள்கொள்ளுவது முண்டு.]

విశ్వతఃపరమంనిత్యం విశ్వంనారాయణగ్ంహరిం ।
విశ్వమేవేదం పురుషస్తద్విశ్వముపజీవతి ।
పతింవిశ్వస్యాత్మేశ్వరగ్ం శాశ్వతగ్ం శివమచ్యుతం ॥

பிரபஞ்சத்தைக் காட்டிலும் உயர்ந்தவனையும், நித்தியனையும், சர்வவியாபகனையும், சீவர்களுக்கு ஆதாரமான நாராயணனையும், பாபங்களைப்போக்குகின்ற அரியாயும், இகத்தையும் பரத்தையும் எந்தப் புருஷன் இரக்ஷித்துக் கொண்டிருப்பவனோ, அப்படிப்பட்டவன் பிரபஞ்சத்தைப் பாவிக்கின்ற பதியாயும், சகல சீவர்களுக்கும் ஈசனையும், எக்காலமுமுள்ளவனையும், ஆசிரிதாளுக்குச் சுபத்தைச் செய்பவனையும், அழிவில்லாதவனையும் (இருக்கின்ற பரமாத்துமாவைத் தியானிக்கின்றேன.)

నారాయణం మహాజ్ఞేయం విశ్వాత్మానం పరాయణం ।
నారాయణః పరంబ్రహ్మ తత్త్వంనారాయణఃపరః ॥

சீவர்களுக்கு ஆதாரமானவனும், ஞானிகளால் அறியத்தகுந்தவனும், பிரபஞ்சத்திற்கு அந்தரியாமியானவனும், உலகத்தார் அடையத்தகுந்தவனும, பரப்பிரம்மசொரூபனும், நாராயண சப்தவாச்சியனும், தத்துவசொரூபனும், நாராயண சப்தவாச்சியனும், (ஆன பரமாத்துவைத் தியானிக்கின்றேன்.)

నారాయణపరోజ్యోతిరాత్మా నారాయణఃపరః ।
నారాయణపరోధ్యాతా ధ్యానంనారాయణఃపరః ॥

நாராயண சப்தவாச்சியனும், ஜோதிசொரூபனும், பரமாத்துமசொரூபனும், நாராயண சப்தவாச்சியனும்; நாராயண சப்தவாச்சியனும், தியானஞ்செய்யத் தகுந்தவனும், தியான

* இம்மந்திரங்கள் வேதவேதாந்தங்களிலே பலவிடங்களிற் புகழப்பட்டு, எல்லாச்சித்தாந்திகளுக்கும் பரமசாரகமாயுள்ளன. சில சித்தாந்திகள் மருட்சியெய்தி, விரோதித்து வாகின்றமையால், அவற்றின் சாரத்தை ஈண்டுச்சுருக்கி விளக்கத்தொடங்கினும்.

விஷயனும், நாராயணசப்தவாச்சியனும் (ஆன பரமாத்துமாவைத் தியானிக்கின்றேன்.)

["நாராயணபரோத்யாதா தியானம் நாராயணஃ பரஃ" என்னும் வாக்கியங்கள் சில கிரந்தங்களிலிரா து. இவ்வாக்கியங்களில் 'த்யாதா' என்னும் வாக்கியத்திற்குத் தியானிக்கின்றவன் என்று பொருள்கொண்டு, நாராயணன் என்கிற விஷ்ணு ஜீவனென்றும், 'தியானம்' என்னும் வாக்கியத்திற்குப் பொருள் தியானபரன் என்று பொருள்கொண்டு, அவ்விஷ்ணு வேறொரு பரனைத் தியானிக்கின்றான் என்று பொருள் முடிப்பர். இப்படிக்கூறுதல், இவ்வேதவாக்கியக்கோவைகளில், நாராயணன், சம்பு, ஹரி, சிவம், அச்சுதன் முதலிய பெயர்களுக்கு முற்றும் முரண்படுகின்றமையால், அவ்வாறு கொள்ளத்தகுந்ததன்று. பின்னெப்படியெனின், அப்பெயர்களெல்லாம் ஒரே பரமாத்துமாவைக் குறிக்கின்றமையால், தியானிக்கத் தகுந்தவனென்பதே பொருந்தும்.]

యచ్చకించిజ్జగత్యస్మిన్ । దృశ్యతేశ్రూయతేపివా ।
అంతర్బహిశ్చతత్సర్వం వ్యాప్యనారాయణస్థితః ।
అనన్తమవ్యయంకవిగ్ంసముద్రేన్తం విశ్వశంభువం ॥

இந்தப்பிரபஞ்சத்தினிடத்தில், எந்த சொற்பவுலகம் காணப்படுகிறதோ, கேட்கப்படுகிறதோ, அதிலெல்லாம் உள்ளும்புறம்பும் வியாபித்து நாராயணன் இருக்கின்றான். (அவன்) முடிவில்லாதவனும், நாசமில்லாதவனும், சருவஞ்ஞனும், சமுத்திரமபோன்ற சமுசார விஷயத்தில் முடிவுண்டாகச்செய்கின்றவனும், பிரபஞ்சத்திற்குச் சுகத்தை யுண்டாக்குமவனும் (ஆனபரமாத்துமனைத் தியானிக்கின்றேன்.)

["அஸ்மின்" என்னும் பதத்திற்குப் பதில் "ஸர்வம்" என்று பாடபேதமாக வழங்கிவருகிறது.

పద్మకోశప్రతీకాశగ్ం హృదయంచాప్యధోముఖం ।
అధోనిష్ట్యావితస్త్యాంతు నాభ్యాముపరితిష్ఠతి ॥

பதுமகோசத்திற்குச் சமானமான கண்டத்திற்குங் கீழ்ப்பாகத்திலும், நாபிக்கு மேற்பாகத்திலுமுள்ள இருதயப் பிரதேசத்தில், கீழ்முகமுடைய இருதய மிருக்கின்றது.

హృదయంతద్విజానీయాత్ విశ్వస్యాయతనంమహత్ ।
సన్తతగ్ంసిరాభిస్తు లంబత్యాకోశసన్నిభం ॥

அந்த இருதயத்தை சகல வியாபகனான பரமாத்துமாவுக்கு, உயர்ந்தஸ்தானமாயிருக்கின்றதாகத் தெரிந்துகொள்ளவேண்டும். (அந்த இருதயம்) சிறிது விகாசமுடைய தாமரை மொக்குவிற்குச் சமானமாகின்றது. நாடிகளினால் எப்பொழுதும் இயங்கிக்கொண்டிருக்கிறது.

తస్యాన్తేసుషిరగ్ంసూక్ష్మం తస్మిన్ సర్వం ప్రతిష్ఠితం ।
తస్యమధ్యేమహానగ్ని ర్విశ్వార్చిర్విశ్వతోముఖః ॥

அந்த இருதயத்தாமரையினுடைய நடுவில் சிறிதான துவாரமிருக்கிறது. அதனிடத்தில் சகலமுமிருக்கிறது. அதினுடைய மத்தியில் எல்லாச் சுவாலைகளு முண்டாயிருக்கின்றதும் எங்குமுகங்களுடையதாயிருக்கின்றதும், மகத்தாயிருக்கின்றதுமான ஜடராக்கினி யிருக்கின்றது.

సోగ్రభుగ్విభజన్తిష్ఠ న్నాహారమజరఃకవిః ।
సన్తాపయతిస్వం దేహమాపాదతలమస్తకం ॥

அந்த(ஜடராக்கினிபுருஷன்) எப்பொழுதும் ஜாக்கிரதையுடையவன், தொனிக்கின்றவன், ஆகாரத்தை முதலிற் பட்சித்துப் பிரிக்கின்றவன். அந்த புருஷன் பாதமுதற் சிரசுவரைக்குந் தியானஞ் செய்கின்றவனுடைய சரீரத்தைப் பிரகாசிக்கச்செய்கின்றான்.

తస్యమధ్యేవహ్నిశిఖా అణీయోర్ధ్వావ్యవస్థితః ।
నీలతోయదమధ్యస్థా విద్యుల్లేఖేవభాస్వరా ॥

அந்த அக்கினியின் நடுவில சூக்குமமான மேற்பார்வையுடைய அக்கினிசுவாலை யிருக்கின்றது. (அச்சுவாலை) கருத்திருக்கின்ற மேகத்தின் மத்தியிலிருக்கின்ற மின்னற்போலே பிரகாசிக்கின்றது.

నీవారశూకవత్తన్వీ పీతాభాస్యాత్తనూపమా ।
తస్యాశ్శిఖాయామధ్యే పరమాత్మావ్యవస్థితః ।
సబ్రహ్మాసశివ(సహరి)స్సేంద్రస్సోక్షరః పరమస్స్వరాట్ ॥

நெல்முனை முட்கொத்த சூக்குமம்போன்றதும், பச்சைநிறக்காந்திபோன்றதும், சூக்கும வஸ்துவுக்குச் சமமாயிருக்கின்றதும் ஆகின்றது. அந்த சிகையினுடைய நடுவினில் பரமாத்துமா வீற்றிருக்கின்றான். அப்பரமாத்துமா பிரம்மா, சிவன், 'ஹரி,) இந்திரன், நாசமில்லாதவன், மேலானவன், சுயப்பிரகாசன்.

"ஸஹரிஸ்ஸேந்த்ர" என்று வங்காள கோசங்களிலும், வழங்குவதிலும் உள்ளது. "ஸ்ஸேந்திர" என்று தென்னாட்டுக் கோசங்களில் மாத்திரமுண்டு.

(இன்னும் வரும்.)

ஸ்ரீபாஞ்சராத்திரம்.

(கூடு-ம் பக்கத்தொடர்.)

ஸ்ரீபாஞ்சராத்திரமானது, மந்திரசித்தாந்தமென்றும், ஆகமசித்தாந்தமென்றும், தந்திரசித்தாந்தமென்றும், தந்திராந்திர சித்தாந்தமென்றும் (ரு0 - ம் பக்கத்தில்) முன்னமே வியவகரித்திருக்கின்றோமல்லவா? இவ்வண்ணம் நான்குவிதமான சித்தாந்தங்களிலே முதலான,

తేష్వయం మంత్రసిద్ధాంతః పాద్మసంజ్ఞో విధీయతే ।
ఏకైకతంత్రభేదేన సిద్ధాంతా బహవస్స్మృతాః ॥

பதும சம்மிதையானது மந்திர சித்தாந்தமாம். ஒவ்வொருசித்தாந்தமும் சுருக்கமும்பெருக்கமுமான தந்திரபேதங்களாலே அநேக விதங்களா யிருக்கும்.

సార్ధకోటిప్రమాణేన బ్రహ్మణా కేశవచ్ఛ్రుతం ।
కపిలాయ తతో బ్రహ్మా లక్షాణాం పఞ్చకం పునః ॥

அந்த பதும சம்மிதையானது ஆதியில் ஒன்றரைக்கோடி கிரந்தரூபமாக ஸ்ரீகேசவனாலே அருளிச்செய்யப்பட்டது. அதை ஐந்திலக்ஷங்கிரந்தமுள்ள தந்திரசித்தாந்தமாகப் பிரம்மாவாலே சுருக்கப்பட்டது.

కపిలోపి చ పద్మాయ ప్రదదౌ లక్షమాత్రయా ।
పద్మోపి దత్తవానస్మభ్యమయుతగ్రంథసంఖ్యయా ॥

அது இலக்ஷங்கிரந்தமாக, கபிலமகரிஷியாலே தந்திரரூபமாகச்சுருக்கப்பட்டது. அதையும் பிரம்மாவினாலே பதினாயிரங்கிரந்தமுள்ள தந்திரமாகச் சுருக்கஞ்செய்யப்பட்டது.

యస్మాత్పద్మోపదిష్టేయం తస్మాత్సా పాద్మసంహితా ॥

ஸ்ரீபதும சம்மிதையானது சுருக்கமும் பெருக்கமுமான தந்திரங்களாலே நான்குவகைப் பட்டிருக்கும்.

సంక్షేపా విస్తరాశ్చైవ తంత్రాణాం ప్రకటీకృతాః ।
సిద్ధాంతద్వయమంత్రసంసిద్ధై శిష్యాణాం హితకామ్యయా ।

இச்சித்தாந்தங்களானவை தந்திரரூபங்களாவதெல்லாம், எம்பெருமான் அவதாரங்களைப்போல, சித்தாதிகளிடத்தில் ஆவிர்ப்பவித்து பிரவர்த்திதங்களானமையால், பிரமாதகோஷரகிதங்களாயும், சிஷியர்களுக்குக் கருணையோடு சொல்லியவைகளாயு மிருக்கும்.

తంత్రాణాం చైవ సర్వేషాం వక్తా నారాయణస్స్వయమ్ ।
అనుగ్రహార్థం భక్తానాం శ్రావయామాస చ స్వయమ్ ।

சுருக்கமும் பெருக்கமுமான தந்திரபேதங்களெல்லாம், பிரம்மாமுதலியவர்களுக்குப் பிரவர்த்தன மாத்திரமாக வுள்ளது. ஆதியில் சர்வேஸ்வரன் சித்தாந்தங்களை வெளியிட்ட போழ்தே, கருணையாலே அநுக்கிரகித்த ஒவ்வொரு சித்தாந்தத்தையும் சுருக்கமும் பெருக்கமுமான தந்திராகாரங்களாக அருளிச்செய்கையாலே, சர்வதந்திரங்களுக்கும் வக்தா ஸ்ரீமந்நாராயணனேயாம்.

చింతామణిర్యథా లోకే శబలా కల్పకద్రుమః ।
అర్థిభ్యో వాంఛితం సర్వం ప్రయచ్ఛతి గతిం వినా ।
పంచరాత్రాఖ్యరత్నం తు చతుర్వర్గఫలప్రదమ్ ।
శాస్త్రాంతరవ్యసనినామభ్యాసః కాలయాపనమ్ ।
ఫలం వా కించిదేవ స్యాద్యత్తత్సాధు బహిష్కృతమ్ ।

இந்த பாஞ்சராத்திரமானது சிந்தாமணி, காமதேநு, கற்பகவிருக்ஷம் இவைகளோடொத்த ஔதாரியத்தை யுடையதாகையால், சகலாபேக்ஷைகளையுங் கொடுக்கத்தக்கதா யிருக்கும். இதைவிட்டு சாஸ்திராந்தரங்களிற் காலங்கழிப்பது வீணேயாகும். சாஸ்திராந்தரங்களிற் கிடைக்கும்பலன்கள் அதியற்பமா யிருக்கும்.

బ్రాహ్మణస్సర్వవర్ణేషు యతిశ్చాశ్రమిషూత్తమః ।
యద్వద్గంగా చ తీర్థేషు దైవతేష్వపి చాచ్యుతః ।
తద్వత్సర్వేషు శాస్త్రేషు పంచరాత్రం ప్రశస్యతే ।

வருணங்களில் பிராமணனும், ஆசிரமங்களில் யதியும், தீர்த்தங்களில் கங்கையும், தெய்வங்களில் அச்சுதனும், எப்படி சிரேட்டிதமோ, அப்படியே எல்லாச்சாஸ்திரங்களிலும் ஸ்ரீபாஞ்சராத்திரமானது விசேஷிக்கப்பட்டதென்று ஸ்ரீபதும சம்மிதையிலே உரையிடப்பட்டது.

మహోపనిషదాఖ్యస్య శాస్త్రస్యాస్య మహామతే ।
పంచరాత్రసమాఖ్యా సా కథం లోకే ప్రవర్తతే ।

ஸ்ரீபாஞ்சராத்திர மென்று திருநாமம் எப்படி வந்ததென்று பிரம்மாவைக் கண்ணுவமகரிஷி கேட்க.

పంచేతరాణి శాస్త్రాణి రాత్రీయంతే మహాంత్యపి ।
తత్సన్నిధౌ సమాఖ్యా సా తేన లోకే ప్రవర్తతే ।

பாஞ்சராத்திரமென்கிற பகலுக்கு, பௌத்தம், ஆர்ஹதம், சாங்கியம். யோகம், பாசுபதம் என்கிற ஐந்தும் இராத்திரியைப்போல் தாமசங்களாயிருக்கையாலே, "ஸ்ரீபாஞ்சராத்திர" மென்று உலகத்தார் சொல்லுவார்கள்.

చంద్రతారాగణా యద్వచ్ఛోభంతే నైవ వాసరే ।
తద్వదితరాణి శోభంతే పంచ నైవాస్య సన్నిధౌ ।

இரவிலே பிரகாசிக்கிற, சந்திரன், நக்ஷத்திரங்கள், கிரகங்கள், சுவாதீபதம், கொள்ளிவாய்ப்

பேய்களாகிறஇவ்வைந்தும் பகலிலேபடுகிறபாட்டைப்போல, ஸ்ரீபாஞ்சராத்திரமென்னும்சூரியன்முன்னே பௌத்தம், ஆர்ஹதம், சாங்கியம், யோகம், பாசுபதங்களைந்தும் அவவண்ணம் கஷ்டப்படுகையாலே "ஸ்ரீபாஞ்சராத்திர" மென்பார்கள்.

పశ్చాత్త్వమథవాయద్వద్దీప్యమానేదివాకరే ।
ఋచ్ఛన్నిరాత్రయస్తద్వదితరాణితదంతికే ।

பகல் பிரகாசிக்கத்தொடங்குகையிலே இரவு ஒழிவதுபோலே, ஸ்ரீபாஞ்சராத்திரப் பிரசங்கமாத்திரத்திலே, தாமசர்களானபாகியர்களெல்லாம் அடியோடழிந்துபோகையால், இதை "ஸ்ரீபாஞ்சராத்திர" மென்பார்கள் என்று உத்தரங்கூறப்பட்டது.

ஸ்மிருதிஸாரப்பிரகரணம்.

விருத்த பராசர ஸ்மிருதி.

(ககஉ ம் பக்கத் தொடர்.)

వేదశాస్త్రాగ్నిభిశ్చాపి సహితస్యద్విజన్మనః ।
ఏకాహాచ్ఛుద్ధిర్నభవేచ్చావాశౌచేకలౌయుగే ॥

கலியுகத்திலே, பிராமணன் வேதசாஸ்திராக்கினிகளுடன்கூடினவனாயினும், இறப்புச்சூதககாலத்தில், ஒரேநாளில் சூதகம் போக்குவது உண்டாகாது. (சக)

జాతాశౌచం మాసవృద్ధ్యా నకుర్యాచ్చకలౌయుగే ।
మహానదీదేశభేదాదఘసంకోచనంనహి ॥

கலியுகத்திலே, மாசாதிக்கியத்தைக்கொண்டு பிறப்புச் சூதகத்தை ஆசரிக்கக்கூடாது. மகாநதிகள், நானாதேசபேதங்கள் இவைகளினாலே சூதகத்தை அடக்குவது கூடாது. (சஉ)

ఏకోద్దిష్టం దత్తపుత్రో నకుర్వీతకలౌయుగే ।
ఔరసేతుసముత్పన్నే దత్తస్యజ్యేష్ఠతానహి ॥

கலியுகத்திலே, தத்துபுத்திரன் ஏகோத்திஷ்ட சிரார்த்தத்தைச் செய்யக்கூடாது. ஔரசனாகிய சுபுத்திரன்பிறந்துவிட்டால், தத்துபுத்திரவனுக்கு ஜேஷ்டத்துவமில்லை. (சங)

విభాగవిషమశ్చాపి నతయోశ్చకలౌయుగే ।
సగోత్రాంనోద్వహేత్కన్యాం గోవధంసర్వదాత్యజేత్ ॥

கலியுகத்திலே, தத்துபுத்திரர்களுக்கு விரோதமான பாகம் இல்லை. சகோத்திர கன்னிகையை விவாகம் செய்யக்கூடாது. கோவதையை எப்பொழுதும் விடவேண்டும். (சச,

ఊఢాయాఃపునరుద్వాహం జ్యేష్ఠాంశంగోవధంసురాం ।
కలౌపంచనకుర్వీత భ్రాతృజాయాంకమండలుం ॥

கலியுகத்திலே, விவாகமான கன்னிகைக்கு மீண்டும் விவாகமும், ஜேஷ்டனுக்கு அதிகபாகமும், கோவதையும், கள் குடிப்பதும், தமயன் பத்தினியை சந்தானத்தின் பொருட்டு போகிப்பதும், ஜலபாத்திரத்தைத் தரிப்பதும் ஆகிய இவ்வைந்தும் செய்யக்கூடாது. (சரு)

సతిదత్తేన్యదత్తస్య గ్రహణంనిష్ప్రయోజనం ।
తస్మాద్ద్విత్రాదత్తపుత్రాన గ్రాహ్యాస్త్వేకదాకలౌ ॥

கலியுகத்திலே, தத்துபுத்திரனிருக்க வேறொரு தத்துபுத்திரனை ஸ்வீகரிப்பது பிரயோஜனமற்றது. ஆகையால் இரண்டுமூன்று தத்துபுத்திரர்கள் ஒரேகாலத்தில் அங்கீகரிக்கப்படத்தக்கினவர்களல்ல. (சசு)

స్త్రీణాంపునర్వివాహశ్చ దేవరాత్పుత్రసంగ్రహః ।
స్వాతంత్ర్యంవాకలియుగే నకర్తవ్యంస్త్రియాఃక్వచిత్ ॥

கலியுகத்தில், ஸ்திரீகளுக்குப்புனர்விவாகஞ்செய்தல், கணவனுடற்பிறந்தவர்களினால் புத்திரர்களைப்பெறுதல், சுதந்திரத்தை ஸ்திரீக்கு ஒருவேளையும் உண்டாக்கக் கூடாது. (சஎ)

కలౌనియోగధర్మోపి నానుబంధ్యావపిధ్రోవా ।
తథోద్ధారవిభాగోపి నాదర్తవ్యోమనీషిభిః ॥

கலியுகத்திலே, நியோகதர்மம், விதியினாலுண்டாக்கப்பட்டிருக்கும் வதை, அப்படியே உத்தேசியமானபாகம், பண்டிதர்களால் ஆதரிக்கக் கூடாது. (சஅ)

ఇమేధర్మాఃకలియుగే వర్ణసంకరభీతితః ।
వర్జనీయాఃప్రయత్నేన పరలోకమభీప్సుభిః ॥

கலியுகத்திலே, இந்த தர்மங்கள் ஜாதிசங்கரமாகுமென்னும் பயத்தினாலே, பரலோகத்தைக் கோருகின்றவர்களாலே பிரயத்தினத்துடன் விடத்தக்கினவைகள். (சகூ)

ఇతిబ్రహ్మముఖాత్పూర్వం శ్రుతాన్ధర్మాన్ బ్రువే ।
సమస్తధర్మవిదుషాం వక్తవ్యంనహివిద్యతే ॥

இப்படி முற்காலங்களில், பிரம்மாவின் வாக்கினால் கேட்கப்பட்ட தர்மங்களை நான் சொல்லினேன். எல்லாதர்மங்களுந் தெரிந்தவர்களுக்குச் சொல்லவேண்டியதில்லையல்லவா? (ருo)

ఇతివృద్ధపరాశరోపదిష్ట కలివర్జ్యకర్మాధ్యాయః సంపూర్ణం

இந்தப்பிரகாரம் விருத்தபாராசர முனிவரால் சொல்லப்பட்ட, கலியுகத்தில் விடத்தக்கின கர்மங்களைத் தெரியப்படுத்தும் அத்தியாயம் முடிந்தது.

இதிகாசபுராணப்பிரகரணம்.

நக்கினசொரூபம்.

இருக்கு; யசுர், ஸாமம் என்கிற பெயரையுடைய வேதமானது பிராமணாதி வர்ணங்களுக்கு மறைவாயிருக்கின்றது. அப்படிப்பட்ட வேதத்தை விட்டவன் எவனோ அவனே நக்கினன். நக்கினனென்கிற சொல்லுக்கு உலகத்தில் வஸ்திரமில்லாமல் திகம்பரனாயிருக்கிறவனென்றர்த்தமானாலும் சாஸ்திரத்தில் நக்கினனென்கிறது வேதரூபமான மறைவை இழந்தவனுக்கே பெயர். திரயீயென்கிற இம்மூன்றுவேதமும் வருணங்களுக்குமறைவு மாத்திரமன்று, சம்ரக்ஷணமாயுமிருக்கிறது. இப்படிப்பட்டதை மோகத்தினாலே விட்டுவிடுகிறவன் எவனோ அவன் நக்கினனென்று சொல்லப்படுவான். சகல தருமங்களையும் அறிந்த வசிஷ்டமகா முனிவர் பீஷ்மருக்கு இவ் விஷயமாக அருளிச்செய்தார்.

அதாவது, பூர்வத்தில் ஒரு காலத்தில் தேவதைகளுக்கும் அசுரருக்கும் தேவமானத்தினாலே நூறு வருஷமளவும் மகத்தான யுத்தம் நடந்தது. அதில் ஹராதன்முதலான அசுரராலே தேவதைகள் தோற்கடிக்கப்பட்டு மிகுந்த துக்கமுள்ளவர்களாய் திருப்பாற் கடலின் வடகரையிற்சென்று ஸ்ரீவிஷ்ணுவின் திருவுள்ள முகக்கும்பொருட்டு தவஞ்செய்து இவ்வண்ணம் தோத்திரமுஞ்செய்தார்கள்;—

சகலலோகநாதனான ஸ்ரீவிஷ்ணுவின் உகப்புக்காக நாங்கள் எந்த வார்த்தையைச் சொல்வோமோ, அதனாலே இப்போதே அந்த ஸ்ரீ விஷ்ணுபகவான் பிரசன்னனாகக் கடவன். எந்த மகாத்துமாவினிடத்திலிருந்து சகல பிரபஞ்சமும் தோன்றினவோ, அவை எல்லாம் மீண்டும் எங்கே ஒடுங்குமோ அப்படிப் பட்டவனை ஸ்தோத்திரஞ் செய்யவல்லவன்யாருண்டு. ஆனாலும் சத்துருக்கள்செய்த அவமானத்தினாலே அடியேங்கள் தேஜோபலங்களை இழந்தவர்களாய் அபயம்வேண்டிச் சந்தியுள்ளமட்டுந்துதிக்கின்றோம். எம்பெருமானே! உனதுஉண்மை நிலை வாக்குக்கு எட்டுமோ? எம்பெருமானே!நீயே பூமியும் ஜலமும் அக்கினியும் வாயுவும் ஆகாசமும் புத்திமுதலான நான்குவித அந்தக்கரணமும், பிரகிருதியும் அந்தப்பிரகிருதிக்கு மேற்பட்ட புருஷனுமாயிருக்கிறாய். அதெப்படி யென்றால், பிரமா முதலாகத் திரணமீறாக ரூபப்பட்டதும் ரூபப்படாததுமாய்க் காலதேச பேத முள்ளதாயிருக்கிற இந்தப்பிரபஞ்ச மெல்லாம் உன்னுடைய ஓரேதிருமேனியாயிருக்கின்றது. அதற்குள்ளே ஆதியில் உன் நாபிகமலத்திலிருந்து சிருஷ்டி நிமித்தமாய் உண்டான எந்தரூபமுண்டோ அந்தப் பிரமஸ்வரூபத்துக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறோம். இந்திரன், சூரியன், ருத்திரன், வசுக்கள், அசுவினிகள், மருத்துக்கள், சந்திரன் என்கிற பேதங்களையுடைத்தாய் நாங்களாகிற உன்னுடைய ஓரோரூபம் யாதுண்டோ அந்தத் தேவஸ்வரூபத்துக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறோம். கோவிந்தனே! ஜம்பமேலிட்டதாய் விவேகங்குறைந்ததாய் பொறுமையும் மனதையடக்கலுமில்லாததாய் உன்னுடைய ரூபம் எதுவுண்டோ அந்த அசுரஸ்வரூபத்தைச் சேவிக்கிறோம். மந்தவிவேகமான எந்த ரூபத்திலே நாடிகள் அதிக ஞானவோட்டமற்றவைகளாயிருக்கின்றனவோ அப்படிப்பட்ட சப்தாதி விஷய ருசியுள்ள உனது யக்ஷஸ்வரூபத்துக்குப் பிரணாமம் பண்ணுகிறோம். ஓபுருஷோத்தமனே! மிகக்கொடுமை யுள்ளதாயும் பயங்கரமாயும் மாயாமயமாயும் உன்னுடைய கறுத்தரூபம் யாதுண்டோ அந்த ராக்ஷச ஸ்வரூபத்துக்கு வந்தனஞ்செய்கிறோம். ஓஜனார்த்தனனே! சொர்க்கஞ் சேரத்தக்க புண்ணியவானுடைய புண்ணிய பலத்தை யுண்டாக்கிறது எதுவுண்டோ அந்த உன்னுடைய தருமஸ்வரூபத்துக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறோம். சந்தோஷமே மிகுந்ததும் ஜலாதிகளோடு சேராததும் எங்குஞ் சஞ்சரிக்கிற சத்தியுள்ளதும் சஞ்சாராதி கிரியைகளில் நிச்சயமான பிரயோசன முள்ளதுமான உன்னுடைய சித்த ஸ்வரூபத்தைத் தொழுகிறோம். பொறுமைக்கு இடமாயும் கொடியதாயும் அனுபவத்தைச் சகிக்கிறதாயும் இரண்டு நாக்குடையதாயுமுள்ள உனது நாகஸ்வரூபத்துக்கு வந்தனஞ் செய்கிறோம். மகா ஞானமுடையதும் சாந்தமானதும் ராகத்துவேஷாதி தோஷங்களில்லாததுமான ருஷிரூபமான உன்னுடைய வியாபகஸ்வரூபத்துக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறோம். ஓபுண்டரீகாக்ஷனே! கல்ப்பத்தின் முடிவிலே எந்த ஸ்வரூபமானது தடையில்லாமற் சகலபூதங்களையும் பக்ஷிக்கிறதோ அந்த உன்னுடைய காலஸ்வரூபத்திற்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறோம். எந்தரூபமானது முடிவில் தேவர்முதலானசகலத்தையும் பக்ஷித்துவிட்டு நிர்த்தனஞ் செய்கிறதோ

அப்படிப்பட்ட உன்னுடைய ருத்திரரூபத்துக்குப் பிரணமஞ் செய்கிறோம். ரஜோகுணப் பிரவிர்த்தியினாலே கருமங்களைச்செய்யுந்தன்மையுள்ள உன்னுடைய நரஸ்வரூபத்தைப் பணிகிறோம். ஓசர்வாந்தர்யாமியே! இருபத்தெட்டு வேதங்களோடு கூடினதாய் சாஸ்திர வழியைக்கடந்து நடக்குந்தன்மையுள்ள பசுரூபம் யாதுண்டோ அந்த உன்னுடைய தாமசஸ்வரூபத்துக்கு நமஸ்காரஞ் செய்கிறோம். யாகங்களுக்கெல்லாம் அங்கமாயும் உலகத்தின் பிரயோஜனத்துக்குச் சாதகமாயும் மரம், கொடி, செடி, பூண்டு, புல், மலை என்கிற அறுவகைகளை யுடையதாயு மிருக்கிற உனது முக்கிய சொரூபத்தை வணங்குகிறோம். திரியக்கு மனுஷ்யன், தேவன் முதலாகவும், ஆகாசம், சத்தம் முதலாகவுமுள்ள எல்லாவற்றிற்கும் முதற்காரணமான உன்னுடைய சர்வசொரூபத்தை அடிபணிகிறோம். ஓ பரமாத்துமாவே! பிரதானம் புத்தி இவைமுதலான வடிவுள்ள இந்தச் சகலத்தைக் காட்டிலும் வேறாய் மேன்மையான ரூபம் யாதுண்டோ ஒப்பற்றதும் காரணமான பிரதானத்திற்குங் காரணமுமான உன்னுடைய அந்தப்புருஷரூபத்தைத் திருவடிதொழுகிறோம். வெண்மை முதலானவைகளும் நெடுமை முதலானவைகளும் கனமுதலானவைகளு மில்லாதே யாதொருவிசேஷணமும் பொருந்தக்கூடாததாய் சுத்தமான பக்தசொருபத்தைக்காட்டிலும்சுத்தமாய் மகாயோகிகளுக்கே விஷயமாகத் தக்கதாயிருக்கிற உன்னுடைய முக்தபுருஷ ஸ்வரூபத்தைக்குறித்து வந்தனஞ்செய்கிறோம். எது எங்களுடைய தேகங்களிலும் அன்னியருடைய தேகங்களிலும் மற்றுமுள்ள சகலத்திலும் நாசமில்லாததாயும் இயற்கையாயும் ஒரேதன்மையாயும் இருக்கின்றதோ, எதைக்காட்டிலும் வேறாய்ப்பிரிக்கத்தக்க ஒருவஸ்துவு மில்லையோ அப்படிப்பட்ட உன்னுடைய பரப்பிரமசொரூபத்துக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறோம். சேதனசேதனாத்துமகமான இந்தச்சகல பிரபஞ்சமும் பரமபதத்திலிருக்கிற சகல ஆத்துமாக்களும்; விகாரமற்றவனும் நித்தியனுமான எவனுடைய சொரூபமோ அந்த சகல நித்திய காரணமாயும் சர்வஸ்வாமியாயும் சர்வசக்தனாயு மிருக்கிற ஸ்ரீவாசுதேவனைச்சரணமடைகிறோம்.

இவ்வாறு ஸ்தோத்திரஞ் செய்த வுடனே அந்தத் தேவதைகள் எதிரிலே, திருவாழி திருச்சங்கு முதலான திவ்யாயுத சமேதனாய் பெரியதிருவடி நயினார் திருத்தோளின்மேல் எழுந்தருளி நீலமேக சியாமளனாய்ச் சேவை சாதிக்கிற ஸ்ரீமந்நாராயணனைக் கண்களாலே கண்டு அநேகவாயிரந்தரம் தெண்டன் சமர்ப்பித்து இப்படிப்பிரார்த்தித்தார்கள். ஸ்வாமீ! அடியேங்களை அனுக்கிரகித் தருளவேண்டும். உன்னையே தஞ்சமாகப்பற்றின அடியேங்களை அசுரரிலிருந்து காத்தருளவேண்டும். ஹிரணியகசிபு... ஹராதனன் முதலான அசுரரெல்லாம் பிரமாவின் ஆக்கினையையுங்கடந்து எங்களுக்குச்சேரவேண்டிய மூன்றுலோக ஹவிர்ப்பாகங்களையும் அபகரித்துக்கொண்டார்கள். நாங்களும் அந்த அசுரரும் சர்வாத்துமகனான உன்னுடைய அமிசங்களேயாகிறோம். ஆனாலும் அவித்தையினாலுண்டான பேதத்தினாலே இந்தலோகத்தை வேறாகப்பார்க்கிறோமாகையால் இப்படிப்பிரார்த்திக்கலாயிற்று. நாங்கள் தேவர்களானாலும் வேதமார்க்கத்தை யனுசரித்துத் தங்களுக்குரிய தருமங்களில் நின்றவர்களாய்த் தபசோடு கூடியிருக்கிற அவ்வசுரரை வெல்ல அடியேங்களுக்குச் சக்தியில்லை. சர்வாத்துமகனான ஓ பகவானே! அடியோமெல்லாம் அவ்வசுரரை எதனாலே வெல்ல மாட்டுவோமோ அப்படிப்பட்ட உபாயத்தை அடியேங்களுக்குக் கொடுத்தருளவேண்டும்.

என்றிப்படி தேவதைகள் பிரார்த்திக்க, ஸ்ரீவிஷ்ணுபகவான் தமது திருமேனியிலிருந்து ஒரு மாயாமோகனை யுண்டாக்கி அந்தத்தேவதைகளுக்குக் கொடுத்து அவர்களைக் கடாக்ஷித்து, ஓதேவதைகளே! இந்த மாயாமோகன் அந்தத் தயித்தியரை மோகிக்கும்படி செய்வான். அதனாலே அவர்கள் வேதமார்க்கத்துக்குப்புறத்தவர்களாய் உங்களாலே கொல்லத்தக்கவராவார்கள். இப்படி செய்யலாமோவென்றால், லோக ரக்ஷணத்திலிருக்கிற எனக்கு பிரமாவின் கட்டளையைக் கடந்து நடக்கிறவர்கள் தேவரானாலும் அசுரரானாலும் மற்றையாரானாலும் அவசியம் வதைக்கத் தகுந்தவர்களேயாகிறார்கள். ஆதலால் நீங்கள் அஞ்சவேண்டாம். இந்த மாயாமோகன் உங்களுக்கு முந்திப்போய் உங்களுடைய உபகாரத்துக்கு ஹேதுவாவான்; என்றிப்படி எம்பெருமான் அருளிச்செய்யக் கேட்டுத் தேவரெல்லாம் சந்துஷ்டியடைந்தவர்களாய் அந்தப்பெருமானைத்திருவடி தொழுது தங்களிடஞ் சென்றார்கள். அந்த மாயாமோகனும் அவர்களுடன் கூடவேசென்று அந்த மகா அசுரரிடத்துக்குப்போய்ச் சேர்ந்தான். (வரும்.)

அத்துவைத மத விரோத விளக்கம். (தொடர்)

இரண்டாம்பத்து.

ஈசனுக்கவித்தை யென்பதே யில்லை யியல்பதாம் ஞானவானந்தம்
பாசமாமவித்தை ஜீவனுக்குண்டாம் பண்பதுபிரகிர்தியி னுறவான்
வாசமாந்தேக மொழிந்திடின்ஞான மாண்புநீர் சைதன்யவடிவாம்
நேசமாமறையின் பொருளிதுகேண்மின் நின்மல னீசனுமன்றே. (௧)
பிரகிர்தியுயிர்கள் பரனுடைபரமாய் பிரவிர்த்தி நிவிர்த்திகள் பொருந்தும்
விகிர்திகளியாவு மவன் நினைவதனன் விவிதபாவனைகளை யடையும்
அகிர்தமுங் கிருதமு மியாவுமே சத்திய மாயசங்கற்பவாதீனம்
சுகிர்தத்திலீசனளித்த சுவாதந்திரியம் சூழுமவ் விதிநிஷேதங்கள். (௨)
சகலகாரணனுஞ் சர்வரக்ஷகனுஞ் சாஸ்விதப் பொருளதாமீசன்
நிகரிலாதவ னவன் பரமாத்மா நிகில ஜீவாத்மருக்கதீதன்
ஜகமெலா மவன் மாயையின்வசமாய் சஞ்சரித்திடுவதாய் நவிலும்
மிகவுமேசிறந்த நூன்மறைத்துணிபாய் விளங்குமா றறிகிலீரென்னே. (௩)
அவித்தையைப் போக்கச் சொல்லுமவ்வேத மகில ஜீவர்கடமக்கலவோ
அவித்தைதான் பூததேகிகட்காகு மதீதமாம் பரனுக்குமுளதோ
அவித்தையே பந்தகாரணமென்று மறிவிக்குஞ் சகல சாத்திரங்கண்
அவித்தையின் பரமாய் பிரமமுஞ்சீவ னாகிடின் பவமகற்றுவனார். (௪)
இறையவன் சொத்தாயிருக்குமிவ்வுலக மியற்கைபான் சுவாமியாமீசன்
நிறைவறிவுடையோ னைதால் பூர்ணன் நித்தியானந்த ரூபனுமாம்
மறைபகரிச்சா சத்தியாலுலகம் வகுத்தளித் தழிப்பவனாகும்
குறைவென்பதில்லாச் சத்தியகாமன் குலவுசங்கற்ப சத்தியனே. (௫)
அனந்தகல்யாண குணங்களையுறுவோ னன்பர்க்கு வேணதையளிப்போன்
சினமுதலழுக்கா றில்லவன் சுத்த தேசுறு சத்துவரூபன்
அனைவற்றுக் காதிகாரணபூதன் அகிலலோகங்களை யாள்வோன்
ஜனனமுமரண மில்லவனருளே தன்மையாய் சகஜமாயுடையோன். (௬)
நிர்க்குணனென்றுற் பிரகிர்திஹேய நீர்மையிலானெனக் காட்டும்
நற்குணமின்றி ஞானமுமில்லை நவிலுமவ் வெண்குணமியாது,
பற்குணம்பொருந்தாப் பொருட்கடாமுளவோ பன்னுஞ் சத்பாவமுமெவிதம்
நிர்க்குணந்தனிற் சகுணோற்பவமாகா நிகழுமுத் தொழிற்களுமாமோ. (௭)
கானலின்ஜலம்போற் காணுமிவ்வுலகம் காக்ஷியாமித்தை யென்றுரைத்தல்
கானலில் ஜலத்தின் தோற்றமாத்திரம்போற் காணுமிவ்வுலகத்திலின்ப
மானது பிரமந் துன்பமே யுண்மை யாகுமென்பதை யுணர்த்துவதாம்
ஆனதாற்றுன்ப மொழிப்பதற்கலவோ வறிவுளோர்முமுக்ஷுக்களாவார். (௮)
பிரமமுங்குண மிலாததுமாகி பிரகிர்தியுமித்தையாமதுவாய்
பரமெனுமுத்தி யின்பதுன்பங்கள் பசையறக் கழிவதேயாகி
வரமெனும்பிரம வனுபவமதுவும் வன்கல்லைப் போலுணர்வற்றால்
நரனதாய் ஜனித்திவ்வுலகிற் சிற்றின்பம் நயத்தலேநல்லதாமலவோ. (௯)
இப்படியாகிற் சற்குருவெதுக்கு யிதமகிதங்கடாணியாது
மெய்ப்படியுரைக்கும் விசேடவாக்கியங்கள் விலக்கிடுமவித்தை தானேது
பொய்ப்படிதன்னில் வழங்குமவ்வேதப் பொருளும் வாக்கியங்களுமெவர்க்கு
இப்புவனத்திற் சமாதானமிவைகட் கியம்புவாருளரெனக்காணேன். (௧௦)
வைதசாத்திரங்கண் விரிவைநன்காய்ந்து விசிட்ட அத்துவிதமேயுண்மை
யாதலாலதற்கு விரோதமாமதங்க ளனைவற்றுமசாரமாமென்றே
மாதவத்தலுனைய் திருப்பெரும்பூதூர் வந்திடுமெதிகளுக்கிறைவன்
யாத்பற்பங்கள் பணிந்திடுஞ்சக்கர பாணியன் விளம்புமிப்பத்தே. (௧௧)

மூன்றாம்பத்து.

இயல்பதாய் ஞானானந்தசத்தியங்க ளியலுருவாகியபிரமச்
செயலதாந்தனு கரணமும் புவனஞ் செய்யபோகாதிசளுயிர்கட்
கயலதாஞ்சடமா மாயைதானியற்றி லம்மாயையும் பிரமமுமிரண்டாம்
செயலதாமிலையெனச் சொலின்செயுமதுவுஞ் செயப்படுபொருளுளவாமோ. (க)

ஆமெனும் பொருட்களுளதிலதாகி லாவதுமுளது மின்மையவாம்
ஓமெனும்பிரணவப்பொருள்பிரம முயிர்களும் பிரகிர்திமூன்று
மாமெனுஞ் சுருதியதைமறுத்துரைக்கி லவைதிகமாகுமவ்வாதம்
தாமெனுந்தன்மை யறிந்தவர்வினையுந் தலைவனைத் தெரிபவராமால். (உ)

இல்லது தோன்றாதோன்றுவதுளதே யாமதுமியற்கையாகையினான்
வல்பொருநீரின் தோற்றமாங்குளதே வயங்குமக்கானலினசைவில்
புல்லதின்பசுமை புகழ்மரகதத்தும் பொருவுமப் பான்மையீதொவ்வும்
அல்லது நீக்கி லுள்ளது நிஜமா மாங்கிலாவிடினதுபொய்யோ. (ங)

இன்மையின் பாவமின்மையேயாகு மிருப்பதின் பாவமு மிருக்கும்
வன்மையாம் நிஜத்திற் குவமையாயுரைத்தல் வழங்குங்கற்பனையும் பொய்யென்றும்
தன்மையாய்ப்பொறிகள் கிரகிப்பதுவேறாய்த் கனித்தனிபுலப்படும் பொருட்க
ளின்மையாமொன்றற்குண்மைமற்றொன்றற் கேற்பவனொருவனேயாகும். (ச)

காண்பது மித்தையென்றுரைசெய்யின் காணிலாதுண்மையெவ்வாறாம்
நீண்பொரு முலகங்காரியமாகின் நிலைப்பது காரணமன்றோ
மாண்பொருங்கடவுள் ஞானவானாகின் மற்றவைஞேயமாய் நிற்கும்
வீண்பொருளுரைக்கினசங்கதமெனவே விவேகிசளறிந்துகொள்ளாரோ. (ரு)

வத்துவாய்சத்தாயுள்ளவையெவைக்கும் வாய்மையாய்க் குணமதுபொருந்தும்
வத்துவில்லாமற் குணாந்தனிநிற்கா வகையது புட்பமுமணம்போல்
வத்துவாமதற்குக் குணமிலாநிலைமை வாய்த்தல்நேராததுவன்றோ
எத்தனைவிதத்தா லெவ்வழிபார்க்கி னேர்ப்படுவது குணிகுணமே. (சா)

தன்னிலைமறந்து மன்னவனெனவே தானுளமகிழுவதேய்ப்ப
இன்னதுபிர்மமென்பனைதத்தானென் றெண்ணுமவித்தையுட்படுவோர்
மன்னுமித் தேகத்தளையிற்கட்டுற்று மயங்கித்தன் கனவினிற்புசித்த
அன்னமேயுடலுக்காதரவாமென் றறைகுவோர்பசியகன்றிடுமோ. (எ)

பிரமமே ஜகமாய்த் தனியதாயிருக்கி லவித்தைபோக்கெனும்பெருஞ்சுருதி
கிரமமேன் நன்மை தீமை யாதெனவே கேட்பவர் சொல்பவரியாவர்
தருமமேன்றெய்வபூசைபேனுயருந் தவவிரதங்களென் றகாதகுமவையு
முரிமையாந் தொழிலேதிலை யுயர்வுதாழ்விலையோய்ந்ததுதுயரே. (அ)

அழிவது ரூபமாறுவதாகும் ஐந்ததாம் பவுதிகதிரக்ஷி
கழிவதுவாகும் காரியமல்லாற் காரணந்தன்னிலைமாறா
பொழிமழை நீரிப்பூமியிலூர்தற் போவதுமாவியாய் விண்ணில்
இழிவதுமுகிலின்வழிபுவிமீதி லென்பது காக்ஷியாம்பொருளே. (கூ)

காக்ஷியாயொளிர்ந்து காரிருணீக்குங் கடவுளாதவனெனமறைகள்
சாக்ஷியாய்ப்புகலும் பராவரதத்துவம் தம்மையூகித்துநன்னெறியி
லாக்ஷியாம்ஞான விளக்கினையேற்றி யன்புறுமடிமையினின்றால்
மீக்ஷியதில்லாப் பதவியில்வாழ்வர் மேன்மையாம் பிரமத்தின்களிப்பே. (க0)

இத்தகைமாயாவாதிகள் மதத்தின் பேதமுட்பாவனை யனைத்தும்
சத்தியச் சுருதிவாக்கியங்களினாற் றள்ளியதயாபரமூர்த்தி
வித்தகச்செல்வன்திருப் பெரும்பூதூர் மேவியவெதிபதி மலர்த்தாள்
பத்திசெய்சக்கிரபாணியாந் தொழும்பன் பகர்ந்தனன் பதிகமாமிதுவே. (கக)

பொதுப்பிரகரணம்.

விலைமாதர் விலக்கம்.

(க0அ-ம் பக்கத்தொடர்.)

அறிவுள்ள சீடனே! வரைவின் மகளிர்க்கு யாவரும் அன்னபானாதிகள் கொடாமல் அநாதரித்தால், அவர்களுக்குக்கதியெப்படி? அவர்களை பகவத் சன்னதிகளில் ஏற்படுத்தி வைப்பானேன்? அவர்கள் சொத்தையும் அபகரித்துக் கொள்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்? இம்மூன்று வினாக்களுக்கு விடை வேண்டு மென்பாயாயின், மிகவும் இதற்குச் சங்கிரகமாகச் சொல்லுகிறோம்; விரித்துரைக்கின்,இந்நூல் பெருகும். அவை சிம்ம சார்த்தூல சர்ப்பாதிகள் பசித்திருக்கிறதே யென்றும், ரௌரவாதி நரகங்கள் பாபிகளுக்காக வேற்பட்டும் அவைகள் பாழ்ப் படுகிறதே யென்றும், அக்கினி விஷ நாபி மலமாதிகள் அப்பிரயோஜன மாகின்றனவே யென்றும், கிருபையுள்ளவர்கள் அதற்கிரையாகத் துணிவதுபோல,விலைமாதர்களின் வஞ்சகமோகாதிகள் பயன்படாமற் போகின்றனவே யென்று அவர்களுக்கடிமைப்பட நினைப்பதுபோலும் இருக்கிறது. நன்னெறியுடைய தர்மவான்கள் அவர்களோடு சம்மந்தப்படாமல், "உண்பது நாழி யுடுப்பதுநான்குமுழ" மென்றபடி அவர்களுக்கு அன்ன வஸ்திரங்கள் கொடுக்கலா மென்றுணரக்கடவீர். அற்பமான பொருள் விஷயத்தில் அருள்ஞானமின்றிக் கெடுநரகுக் கீடாகிக் கிடக்கும் பழிக்காரப் பாதகிகளாகி, வரைமுறைமாறி மானத்தைவிற்று, வயிறு வளர்க்கும் அவர்களுடைய சுகத்தை அனுபவித்து அவர்களை வஞ்சிக்கிறதில்லை யென்று சத்தியம் செய்து கொடுத்து, ஈனத்தனமான அவர்கள் சொத்தையும் அபகரிக்குமவர்கள் அவர்களைப்போலவே எமலோகத்தினின்றும் வந்த புருஷரூபிகளான கொடிய சண்டாள நரகராக்ஷசராகவே யிருப்பார்கள்- அதற்குச் சந்தேகமில்லை யென்றறியக்கடவீர்.

ஓய் உத்தமபுத்தியுள்ளவரே! அமிருத சாகரத்தில் ஆலகால விஷமும், வடவாநலமும் இருப்பதுபோல பகவத் சந்நதிகளில் பரத்தையர் இருப்பதும்உண்மையே. ஆனபோதிலும் அவர்கள் கைங்கரியவதிகளாய் தாசிகளென்கிற திருநாமத்திற் கனுகுணமாய் அர்ச்சிக்காப்பு முதலானவைகளைச் செய்துக் கொண்டு எம்பெருமானையே மங்களாசாஸனஞ் செய்து அவன் கண்டருளிய தீர்த்தப் பிரசாதாதிகளை ஸ்வீகரித்து பக்தியோகிகளாயிருக்க வேண்டியதென்று ஸ்ரீவைகானசபாஞ்சராத்திர சாஸ்திரங்களில் விதித்துள்ளது. அப்படிக் கிருப்பார்களானால், எல்லாராலும் வந்திக்கப்படுவார்கள். அவர்களின் பொருட்டுவருமவர்கள் எம்பெருமானைச் சேவிப்பாராயின் ஈடேற்றமுடையவராவார்கள்-அப்படிக்கொத்த பகவத்சரண கமலப்பிராப்தி காமிகளாயிருக்கும் தாசிகளைச் சாக்ஷாத் நமது தாய்மாரைப்போலே யெண்ணி தண்டன் சமர்ப்பிக்கவேண்டியது நமது கடமையாக விருக்கின்றது. யாவரையும் உஜ்ஜீவிப்பிக்க வேண்டிய கடமையைப்பற்றி சாஸ்திரங்கள் அவசியமாக அவர்களும் இருந்து எம்பெருமானைப் பஜித்து வரும்படிக்குக் கட்டளையிட்டிருக்கின்றன. அதை யறிந்துள்ள பெரியோர்கள் அவர்களுக்கும் ஊழியம் விதித்திருக்கின்றனர்.அவர்களை எம்பெருமானுடைய பத்தினிகளென்று, மங்கல சூத்திர தாரணமுஞ்செய்திருக்கின்றனர். ஆதலால் அவர்களை நமது தாய்மார்களாகவே நினைக்கவேண்டியது தர்மம். அல்லது அந்த தாசிகள் குய்யாதி சாபல்யத்தால் விஷயப்பிராவண்ணிய முடையரானபோதிலும் இவள் வேசியில் ஜாதி என்னும்படிக்குச் சத்தியவதிகளாய் யாரேனும் ஓர் நல்லநாயகனையே தெய்வமாக வெண்ணியவனுக்கு இன்பத்தைக் கொடுத்துக்கொண்டு, பகவத்பாகவத சேஷபூதைகளாய், பொருமை,வஞ்சகம், பேராசைமுதலிய துர்க்குணங்களை விட்டு, தர்மசிந்தை யுடையவர்களாய் நீதியுடையவர்களாய் மறுமைப்பயனை விரும்பினவர்களாய் தம்முடைய நீசக்ருத்தியத்தை நினைத்துக் கொண்டவர்களாய் நடுங்கி, ஐயோ! என்ன ஜென்ம மெடுத்துவிட்டோமென்று சதாசார்ய சம்மந்தத்தைப் பெற்று மனங்கனிந்து நடுங்கியழுது, ஏ ஸ்வாமி! தேவரீருடைய திருவடிகளுக்குச் சரணம் எம்மைக்கைவிடாதேயும் என்ற மனஸ்தாபம் பிறந்து மஹாவிசுவாச சிந்தையுடையவர்களாய் இவ்வுலகிலிருக்கும் நாளும் பரப்பிரம்ம குணாநுபவசீலவதிகளா யிருப்பார்களாயின், சர்வதோஷ பரிகாரனான பதிதபாவனன், எமது கருணைப் பெருங்கடலான தீனபந்து, சிசுபாலன், கண்டாகர்னன், அஜாமளன்,

க்ஷத்ரபந்து, பூதகி முதலினரை ரக்ஷித்தது போலிவர்களையும் ரக்ஷிப்பா னென்பதற்குச் சந்தேகமில்லை.

ஓய் எமது ஆபத்சகாயனன ரக்ஷகனுக்கடிமையுற்ற ஆர்த்தரே! "படைவாள்விழி மருட்டுங்குலாவிகள், நகையான் மயலெழுப்புங்குபாடிகள், பரிவோர் குடிகெடுக்குந்துரோகிகள் வசமாயே;படுவோர்பொருளபகரிக்குங்குணலிகள், புதியோர்தமை மழப்பும் பிசாசிகள், பழையோர்தமை வெருட்டுங்குரோதிகள் உறவாயே;" என்றும், "உருக்கமுற்றழைப்பர்சேலையை, அவிழ்த்தடுத் தடுத்துடுப்பர்சோமனை,யொதுக்கிமற்றதுக்குளேகுறுநகையாடி; யுதைப்பவர் சற்றிணக்கமாகுவர், கடித்திலைச் சுருட்கைமாறுவர், உருட்டுகைக்கடைக்கணே பொர மடமாதர்; வருத்து மிச்சகத்திலே யிதழ், அருத்து மச்சுகத்திலே தலை, மடித்தகைப் புடைப்பிலே பெரு மயலாகி;" என்றும், "மறைத்திடு மூலைக்காட்டுவார் தனி, பெருத்திடுமயல் பூட்டுவார் மையை, வரிக்கடைவிழிதீட்டுவார் வசிகரமாக; மருத்திலைப் பலகூட்டுவார் கையில்,வசப்படநகைக்கோட்டுவார் செய்கை,மயக்கினிலுயிர் வாட்டுவார் அவர் வசமானல்; இறுக்கியநயமூட்டுவார் பொருள், பறித்து வறுமையாக்குவார் பினை, இனைத் தொருபடி போக்கிலாவிடில் நகையாடி; இரக்கவும் வழிகாட்டியே சிறு,கரித்துணி யொடுமோட்டை யோடுகை, யினிற்றடியோடு போக்குவாரவர் உறவாமோ." என்றிப்படிக் கெல்லாம் சொல்லித் தள்ளப்பட்டுள்ள கணிகையர் வசத்திலகப்படாமல் கிரகாசிரமத்திலிருக்கு நாளும் சர்வதேவர்களும்; பிராமணர்களும், சுற்றத்தாரும், இஷ்டபந்து, ராஜவர்க்க முதலினவரும் அறிய எம்பெருமான் சாக்ஷியில் தாரைவாக்கப்பெற்றவளும், தெய்வமே யென்று தன் கழுத்தைக் கொடுத்தவளும், கையைப்பிடித்திழுக்க விலைப்பட்ட பசுவைப்போல் வந்து நுழைந்து தன்வீட்டிலுள்ள யாவரும் நிந்திக்க, அடிக்க,வைபப்படாத பாடுகள் அவர்களிடத்திலெல்லாம்பட்டு,அவளும் யாவருக்கும் ஊழியஞ் செய்து கிடக்கத்தக்கவளும், தன்னோடுந்தன் புண்ணிய பாவத்தோடும்,அர்த்தபாகமுடையவளும்; தான் தன் மகிழ்நன் இறந்தால் வெறுங்கழுத்தினளாய்த்தன்ஆயுளுள்ள காலமும்சர்வாலங்காரமும்நல்லபோஜனசவுக்கியங்களும் இழந்து பிரம்மசாரி விரதத்தை உடையவளாய், சகுனவிரோதி என்றிகழப்பட்டவளாய்,மணவாளனுக்கு நற்கதிவரும்படிக்குப் புத்திரனைக் கொடுத்தாவது அல்லது தானவது உற்றுரிமைசெய்து அக்குலக்கடன் பணக்கடன் முழுவதும் நடத்தக்கடவளாய் இருக்கின்ற தன் மனைவியைத் துரோகஞ்செய்துபிறர்மனைவிகளையும் மாயவிலைமங்கையர், விதவைபர் முதலினரையும் புணரநினைக்காமல் "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே யின்பம்" என்றபடி, தன்கழுத்திலமாலைபோட்டமெல்லி மகிழ விதித்த நாள்களிற்கூடிக்கலந்து இல்லறதர்மத்தையறிந்து வழுவாமல் நடத்தப்பட்டவளுடைய எவ்வனமானது மிகவும் பயனுள்ள தென்று புணரவேண்டியது.

வாரீர் நன்னெறிகொண்ட புண்ணியவானே! இவ்விடத்திலோர் இதிகாசமுண்டு; அதைச் சொல்லுகிறேன் கேளும். பிதுர்தனமுள்ள மிருந்த தனவானொருவன் நவபுரி யென்கிற வூரில் கல்யாணபூத மொத்த மந்திமுகசுந்திர என்னு மோசக்கார வேசை வலையிற்பட்டு, தன் அளவற்ற பொருள் பூமியெல்லாம் இழந்து புத்திர களத்திராதிகளை பிக்ஷாபாத்திராளாக்கித் தானும் அவள் செய்த அவமான உதையடிகளுண்டு பொறுக்க முடியாமல் நாணயமற்றவனாய் மனம்வெறுத்து வேறூரிலாவதுபோய்ச் சம்பாதித்து பிழைக்கலாமென்றெண்ணிஊரைவிட்டு ஓடிப்போகிறவன் மறுபடியும் அவள் மயக்கத்தால் அவளிடத்திற்போய்த் தன்னபிப்பிராயத்தை வெளியிட்டான். அவளுமிந்தசமயம் இவனை வெறுமை விடக்கூடாதென் றெண்ணி, அந்தோ! என்னுசை நாயகனே! உன்னைவிட்டு உயிர் வாழ்வேனோ வென்று அழுதுக்கொண்டே வந்து வழிவிட்டு அவனும் அவள் கண்ணைத்துடைத்து இதோ வந்துவிடுகிறேன் நீயஞ்சாதே யடிபெண்ணே! யென்று விடைபெற்றுக்கொண்டு போய் அநேகநாள் கஷ்டப்பட்டு முன்னினும் பதின்மடங்கு அதிகமான பொருள்களைச் சம்பாதித்து அனேக வண்டிகளிலேற்றித் தானும் ஓர் பல்லக்கிலேறித் தன் பெண்டு பிள்ளைகளை ரக்ஷிக்கலாமென்றெண்ணித்தன்னூருக்குச் சமீபமாக வரும்போது, கீழ்க்கூறிய வேசியானவள் இவனை யூரைவிட்டோட்டினது போலவே வேறொருவனை வழியனுப்பிவிட்டு அவ்வழியிலே யழுதுநின்றுள். அவளைக்கண்டவன் இங்கேனடி அழுது

நிற்கிறாயென்று கேட்டான், அவளும் தேம்பித்தேம்பி யழுதுக்கொண்டு உன்னை வழிவிட்ட நாள் முதல் எப்பொழுது நீ வருவாயோவென்று இரவும் பகலும் அன்னாகார நித்திரையின்றி நீவரும்வழிபார்த்துஅழுது நிற்கிறேனென்றாள். இதை இவன் மெய்யென்று கேட்டுருகி அவள் கண்ணைத் துடைத்து, விடடா பல்லக்கைத் தேவடியாள் தெருமேலே என்று சொல்லி பழையபடி அவள் வீட்டில்வந்து சேர்ந்து உள்ள பொருளை யெல்லாம் இழந்துவிட்டான். இதுபிரசித்தம். இஃதன்றியோர் வேசிநேசனானவன் தன்னாசைக்குரிய தாசிக்கு வியாதி நேர்ந்தகாலத்தில் அவன் காளிகா தேவியை நோக்கி, அம்மே! இவள் வியாதி நீங்கிச் சவுக்கியப்பட்டால் என்றலையை யறிந்து உனக்கு பலிகொடுக்கிறேனென்று சொல்லி, அவ்வண்ணந் தலைவெட்டிக் கொடுத்துயிரிழந்தானென்பதும் பிரசித்தமே.

இவ்விலைமாதர் விலக்கல் கிடைத்த வரையில் முதர்பாகமாக முடிக்கப்பட்டது.

ஜ்யோதிஷம்.

ஸ்ரீயஃபதியாய், லீலாபோக சாதநமான விபூதி த்வய நாயகனாய், அத்வாரக ஸத்வாரக முகமாய் ஸகல ஜகத் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாய், ஸர்வாந்தரியாமியாய், ஸர்வ வியாபகனாய், ஸர்வ சக்தித்வ ஸர்வஜ்ஞத்வாத் யநந்த கலியாண குண நிதியாய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமந்நாராயணன் தன்னோடு அவிபக்தமாய்க் கிடந்த சித்விசிஷ்டாசித்தைப்பிரித்து, அண்ட காரணமான மஹதாதிகளாய் பிரவர்த்திக்கச் செய்து, அண்டத்தை நிருமித்து, அதில் பத்தாத்ம ஸமஷ்டி பூதனான பிரம்மாவைச் சிருஷ்டித்து, வேதத்தை உபதேசித்து, பூர்வ கல்பத்தின்படி சிருஷ்டி செய்யும்படி நியமித்தான். அவனாலும் அவனிடம் உபதேசம்பெற்ற தேவரிஷிகளாலும் விஸ்தரிக்கப்பட்ட ஜ்யோதிஷ சாஸ்திரமானது வேதாங்கங்களுக்கு நேத்திர ஸ்தானமாயிருக்கின்றது. ஆகையால், ஜ்யோதிஷ ஜ்ஞாநாபேக்ஷை ஸர்வத்ராளுக்கும் அவசியமானது. எங்ஙனேயென்னில், முதலாவது தர்மார்த்த காமமோக்ஷமாகிய சதுர்வித புருஷார்த்தங்களையும் விரிவாக உபந்நியசிக்கும் வேதவேதாந்தங்களிலும், ஸ்மிருதியாதிகளிலும் விவாகயாக சிராத்த முதலிய நித்திய நைமித்திகாதி சுபாசுப கர்மங்களுக்கும், திதிவார நக்ஷத்திர யோக கரணாதி ஜ்ஞாநாபேக்ஷை அவசியம்; இரண்டாவது "ஆயுராசாஸ்தே" என்கிறபடி தர்மாநுஷ்டானத்திற்குத் தன் ஆயுஷ் முதலானவற்றை அறியுமாறுமவசியம்; மூன்றாவது "அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி" என்கிற பிரமாணாநுசாரம் யாகாதி கர்மாநுஷ்டானங்களுக்கு புத்திரன் உண்டு என்றறிகைக்கும், புத்திரன் ஜாதனான வநந்தரம் உண்டாகும் கண்டாதி கண்டங்கட்கு, கரும காண்டங்களில் விதித்திருக்கும் சாந்திகளை உணர்ந்தனுஷ்டித்து, பூர்ண ஆயுஷ்மானாகச் செய்வதுமவசியம்; விரிக்கிற் பெருகும். ஒருவனுடைய வாழ்நாளில் நடக்கும் பிராரப்தாதி கருமங்களில் ஆகூழ் போகூழ் என்கிறதில் போகூழையுணர்ந்து அதற்குவேண்டிய சாந்தியாதிகளை அனுஷ்டிக்க "பதவீபூர்வ புண்யாநாம் லிக்யதே ஜன்மபத்ரிகா" என்கிறபடி ஜாதகபாக ஜ்ஞாநம் வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் வைத்திய சாஸ்திர ஞானம் எப்படி இன்றியமையாததோ அதைப்போன்று ஜ்யோதிஷ சாஸ்திர ஞானமும் அவசியமானது.

ஜ்யோதிஷ சாஸ்திரம் மூன்று பிரிவினையுடையதாயிருக்கிறது. முதலாவது - கணிதபாகம், 2-வது ஸம்ஹிதாபாகம், 3-வது ஜாதகபாகம். முதலாவதாகிய கணிதபாகம் பிரஹ்ம சூரிய சோம வசிஷ்ட வியாசாத் யஷ்டஸித்தாந்தங்களை யுடையதாயும், பிரஹ்மகுப்த ஆரியபட பரஹித சித்தாந்த சிரோன்மணி கணகாநந்த கசரதருப்பண அஹோபில நாதீயமாதி அநேக தந்திரங்களையுடையதாயுமிருக்கின்றது. இந்த பாகத்திற்றான் திதி நக்ஷத்திராதிகளும், கிரகராசி பிரவேசாதிகளும், கிரகண கிரக ஸமாகமாதிகளும் கணிக்கும் மார்க்கமும், அவைகளின் ஸ்தானம், பிரமாணம், உருவம் முதலிய பாவத்விஷயங்களும் விரிவாய்க் கூறியிருக்கிறது. இரண்டாவதாகிய ஸம்ஹிதாபாகம் கர்க்கி வராஹமிஹிராதிகளால் விரிவாய் விரிக்கப்பட்டிருக்கிறது. இதில் க்ஷாம க்ஷேமாப ராஜ்ப சுபிக்ஷாதிகளை முன்னதாய் உணரும் மார்க்கம் சொல்லப்படுகிறது. மூன்றாவதாகிய ஜாதகபாகத்திற்கு வக்தாக்காள் நாரத மய யவநேஸ்வர சுக்ர சுக பராசர வாதநாராயண ஜீவசர்ம ஸத்யாசார்ய விஷ்ணுகுப்த தேவஸ்வாமி கர்

க்கி மாதவாசார்ய வராஹமிஹிர பிரப்ருதிகளானவர்கள். அநேகர் இதில் ஒவ்வொருவரும் ஜனித்தகாலத்தில் கிரகங்களிருந்த ஸ்திதியைக் கொண்டு பலன்களைச் சொல்லுகிறது. இதிலேயே ஆருடபாகமும் சேர்ந்திருக்கிறது. ஜாதகம் ஒருவன் சனித்தகால கிரகஸ்திதியையும், ஆருடம் ஒருவன் பிரசினித்த காலகிரகஸ்திதியையுங்கொண்டு பலாபலன்களை நிருபிக்கிற ஹேதுவா யிருக்கின்றன.

தமிழ்ப் பாஷையில், வேதவேதாந்த ஸ்மிருதி இதிகாஸ புராண வைத்திய சிற்பமாதி சாஸ்திரங்கள், ஸம்ஸ்க்ருத கிரந்தங்களை ஆதியாகக் கொண்டு செய்யப்பட்டும் மொழிபெயர்க்கப்பட்டும் இருக்கிறதோ, அதைப்போலவே ஜ்யோதிஷ கிரந்தங்களிலும் பல ஸம்ஸ்க்ருதத்திலிருந்து மொழிபெயர்த்ததும் முதனூலாகக் கொண்டு செய்ததும், சில ஒரு முதனூலைக் கொண்டு செய்த தொன்றாகக் காட்டாது. இதுவே முதனூலென்று தோற்றும்படி கல்பித்தவைகளாகவும் இருக்கின்றன.

நம்மவர்கள் நூல்களில் அநேகம் தேவபிரணீதமாயும், தேவதைகளிடத்தில் ஸ்வயமாய்க்கேட்ட மகரிஷிகளாலும், தபோமஹிமையால் தங்களுடைய தேஹத்தை அந்தந்த பிரதேசத்திற்குத் தகுந்தபடி செய்துகொண்டு விமானம் முதலான ஸாதனத்தால் அந்தந்த இடத்திற்குப் போய் நன்றாய்ப் பார்த்த ருஷிகளாலும் செய்யப்பட்டவைகள். எஞ்சிநின்ற சில பின்னிட்ட காலத்திருந்த வித்வான்களால் சூரிய ஸித்தாந்தாதி கிரந்தங்களிற் சொல்லி யிருக்கும் நளிகாயந்திராதிகளைக்கொண்டு பார்த்துண்டான ஞானத்தால் செய்தது. ஹூணர்கள் ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் கணிதபாகத்தாலேற்படும் கிரகணசஞ்சாராதிகளை சரியானதென்று ஒப்புக்கொண்டும் உலக சிருஷ்டி வைத்திய யந்திர சாஸ்திராதிகளுக்கு தேவ கர்த்ருத்வத்தை நீக்கி மனுஷ்ய ஸ்வாபாவீக அனுபவஜ்ஞான கர்த்ருத்வங் கூறுவதுபோலே, கணிதபாகத்திற்கும் ஆகாயத்தில் இராப்பகலில் காணும், மூடனும் விஸ்மயிக்கத் தகுந்த சூரிய சந்திராதிகளுடைய காக்ஷியும், விநோதங்களும், ஆடம்பரங்களும் எல்லாருடைய மனதையுந் திருஷ்டியையும் ஆகரிஷித்து, தினேதினே ஒவ்வொருவரும் ஜீவனோபாயத்திற்காக கவனிக்க வேண்டிய வேலையின் ஆரம்பகாலம் விடவேண்டிய காலம் அதாவது காலை மத்தியாங்நம் மாலை முதலியவற்றாலும், வெவ்வேறு பயிர் செய்வதற்குரிய பருவம் முதலியவற்றாலும், அறிவு அங்குரிக்கும் தசையுடைய சிறுகுழவிகள் மனதையுங் கவரும். சந்திரபிம்பத்தாலுண்டாகும் சுக்கில கிருஷ்ண பக்ஷாதிகளாலும், சூரிய சந்திர நக்ஷத்திராதிகளுடைய சலனத்தைக் கவனிக்கச் செய்தும் உண்டாகிய நித்தியாநுபவ ஞானத்தை யந்திர பூத தத்துவசாஸ்திர முண்டாவதற்கு வெகுகாலம் முன்னமே ஒரு சாஸ்திரமாக எழுதிவைத்தார்கள். அது நாளாவர்த்தியில் விர்த்தியாகி தற்கால பிரபல ஸ்திதிக்கு வந்திருக்கிற தென்றுங் கூறுகிறார்கள். இவர்கள் இப்படி சொல்லுகிறதற்கு ஹேது இவர்களுடைய வேதத்தில், பிரம்ம சிருஷ்டி, தேவசிருஷ்டி, உலக சிருஷ்டி, ஆத்மதத்வம், தேகதத்வம், மந்திர சாஸ்திரம் முதலானவைகளைப் பற்றி, ஒன்றும் கூறாமையே. ஏன் சிருஷ்டியாதிகளைப்பற்றி சில கூறியிருக்கின்றதே யெனில், அப்படி ஏகதேசமாய் கூறியிருக்கின்றதும் சாதாரண ஞானத்திற்கும் பொருந்தாமையால் ஒன்றுமே கூறவில்லை யென்று சொல்லலாம். இவைகளால் கிடைத்தலாபம் ஆரியர்கள் ஒவ்வொரு நிமிஷத்திலும் செய்யும் வைத்தியம், ஜ்யோதிஷம், கல்யாணம், கருமாந்தம் முதலிய லௌகிக வைதீக வியவஹாரங்களில் ஒவ்வொரு காரியத்தின் ஆரம்ப மத்திய அவசானத்தில் பகவத்தியானம் செய்தும் அவைகளில் தெய்வத்தின் விசித்திர சக்தியைக் கண்டு வந்தனை வழிபாடுகள் செய்து, ஆஸ்திகத்தில் விர்த்தியடைய, ஹூணர்கள் ஆஸ்திக நாஸ்திகர்களாய் பழுக்கிறதேயாம். ஆகையாலன்றோ பஞ்சாசத்கோடி விஸ்தீரணமான பூமியில் இந்த பரதகண்டத்தை எல்லோரும் விரும்பி ஆசிரயிக்கிறது. இந்து தேசத்தின் பாக்கியமே பாக்கியம். இதனாலன்றோ இந்த இதுந்தேசத்தை சுத்த ஆஸ்திக பரிசுத்த இந்தியா வென்று தியாசிபிக் சபையைச் சேர்ந்தமாடம் ப்ளவாட்ஸ்கி, கர்னல் ஆல்காட் முதலானவர்கள் தங்கள் பிரசங்கங்களில் புகழ்ந்தது.

ஓர் வைஷ்ணவன்.

(இன்னும் வரும்.)